DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 55/2017

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW3

| | | |
|---|---|---|
| Name | : | சிவபாலநாதன் |
| Father Name | : | **சக்தி மோகன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது காஞ்சிரங்குடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை தாலுகா காஞ்சிரங்குடி குரூப், காஞ்சிரங்குடி கிராம சர்வே எண் 244/1 க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டரில் 1 ச.மு. சீனி செய்யது உம்மாள், 2 உ.சி.நூ. மு. கருணை பீவி ஆகியோர் பெயரில் பதிவாகி உள்ளது. சர்வே நம்பர் 245, க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டரில் 1 ச.மு. சீனி செய்யது உம்மாள், 2 உ.சி.நூ. மு. கருணை பீவி ஆகியோர் பெயரில் பதிவாகி உள்ளது. சர்வே 250/1 க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டரில் 1 ச.மு. சீனி செய்யது உம்மாள், 2 உ.சி.நூ. மு. கருணை பீவி ஆகியோர் பெயரில் பதிவாகி உள்ளது. சர்வே நம்பர் 330/1 க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டரில் நைனா முகம்மது பெயரில் பதிவாகி உள்ளது. சர்வே நம்பர் 330/2 க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டரில் நைனா முகம்மது பெயரில் பதிவாகி உள்ளது. சர்வே நம்பர் 331/1 க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டரில் உ.சி.நூ. மு. கருணை பீவி பெயரில் பதிவாகி உள்ளது. சர்வே நம்பர்

330/2 க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டரில் உ.சி.நூ. மு. கருணை பீவி பெயரில் பதிவாகி உள்ளது. அதற்குண்டான ஏ ரெஜிஸ்டர் நகல் Ex.X5.

2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

காஞ்சிரங்குடி குரூப்பில் நிலஉடமை மேம்பாட்டுத்திட்டத்திற்குண்டான சர்வே 30.08.1987 ல் செய்யப்பட்டது. அதுவும் நிலஅளவை உதவி இயக்குனரால் ஒப்புகை செய்யப்பட்டது. சர்வே நம்பர் 244/1, 245, 250/1 ஆகியவற்றிற்கு கருணை பீவி பெயரில் பட்டா கிடையாது என்றால் சரிதான். சர்வே நம்பர் 330/1, 330/2 ல் கண்ட சொத்துக்கு இன்றைய தேதி வரை நைனா முகம்மதுபெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். நைனா முகம்மது தான் அனுவபம் செய்வதாக சொல்லி நான் அடங்கல் நகல் வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே நம்பர் 331/1, 331/2 ல் கண்ட சொத்திற்கு தற்போது கருணை பீவி பெயரில் பட்டா கிடையாது, தற்போது அச்சொத்திற்கு நைனா முகம்மது பெயரில் பட்டா உள்ளது. கிராம கணக்கில் உள்ளது படி சர்வே நம்பர் 331/1, 331/2 ல் கண்ட சொத்துக்களை நைனா முகம்மது என்பவர் அனுபவம் செய்து வருகிறார் என்று என்னால் வழங்கப்பட்ட சாகுபடி அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாகுபடி அடங்கல் Ex.X5 உடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது சர்வே நம்பர் 244/1 ஆஷியா மரியம் வகையறா பெயரிலும் சர்வே நம்பர் 244/2 மற்றும் 244/3 ஆகீயவை சாதிக் அலி என்பவர் பெயரிலும் பட்டா பதிவு செய்யப்பட்டு அவர்கள் பெயரில் சாகுபடி அடிங்கல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே நம்பர் 245 க்கு ஆஷியா மரியம் வகையறா பெயரில் பட்டா பதிவுகள் உள்ளது என்றும் அதற்குண்டா சாகுபடி அடங்கல்களும் வழங்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். சர்வே நம்பர் 250/1 க்கு ஆஷியா மரியம் வகையறா பெயரில் பட்டா பதிவுகள் உள்ளது என்றும் அதற்குண்டா சாகுபடி அடங்கல்களும் வழங்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான்.

18, 19, 21 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 55/2017

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW2

Name : சபிதா

Husband Name : மாரிமுத்து

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது கீழக்கரை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை குரூப் சர்வே நம்பர் 195/1 க்குண்டான UDR ஏ ரெஜிஸ்டர் நகல் Ex X 1. சர்வே நம்பர் 195/1 ஏ சொத்தானது நைனா முகம்மது பெயரிலும் சர்வே நம்பர் 195/1 பி சொத்தானது சீ. நூர் முகம்மது பெயரிலும் சர்வே நம்பர் 195/1 சி சொத்தானது சே. தாஜ் முகம்மது பெயரிலும் பதிவாகி உள்ளது.

<u>2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

கீழக்கரை குரூப்பில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் நிலஉடைமை மேம்பாட்டுத்திட்ட காலத்தில் அளக்கப்பட்டு 06.09.1987 ம் தேதி முடிவு செய்யப்பட்டு சர்வே ஆய்வாளரால் ஒப்பம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நிலஉடமை மேம்பாட்டுத்திட்ட தனிவட்டாட்சியல் 07.09.1987 ல் ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளார். அதனடிப்படையில் உதவி இயக்குநர் நிலஅளவையரால் 11.09.1987

ம்தேதி ஏற்றுக்கொள்ளப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1987 ம் ஆண்டுக்குரிய பசலி வருடம் 1396 என்றால் அதைப்பற்றி தற்போது சொல்லமுடியாது. நடப்பு ஆண்டான 2022 க்குரிய பசலி வருடம் 1431 ஆகும். சர்வே நம்பர் 195/1 ஏ என்பது சுமார் 100 க்கு மேலே உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் இருக்கலாம். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே நம்பர்களுக்கு தனித்தனி நபர்கள் பெயரில் பட்டாக்கள் வழங்கப்பட்டு அவர்கள் அந்த அந்த சொத்துக்களில் வீடுகள் கட்டி தனித்தனியாக காம்பவுண்டு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அது சம்மந்தப்பட்ட அடங்கலை இன்று கோர்ட்டுக்கு கொண்டு வந்துள்ளேன். சர்வே நம்பர் 195/1 ஏ மற்றும் அதனுடைய பல உட்பிரிவுகளுக்கான 1431 பசலிக்குண்டான அடங்கல் நகலை தாக்கல் செய்கிறேன். அது Ex.X2. மேற்படி சர்வே எண்களுக்குரிய அ பதிவேடு நகலை கொண்டு வந்துள்ளேன். அதன் நகலை தாக்கல் செய்கிறேன். அது Ex.X3. மேற்படி சர்வே எண் 195/1 ஏ மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்ற உட்பிரிவுகளுக்கான பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்பதற்கான கணினி அ பதிவேடு நகலை தாக்கல் செய்கிறேன். அது Ex.X4.

<u>18, 19, 21 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்கண்ட 2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மறுவிசாரணை</u>

சர்வே நம்பர் 195/1 ஏ சொத்தை 03.06.2022 அன்று நான் பார்வையிட்டேன். அதில் காலி இடமும், வீடுகளும் இருக்கிறது.